சிகரத்தின்
# தினத்தென்றல்
SIGARATTHIN DHINATHENDRAL · தமிழ் சமுதாயத்தின் குரல் · TAMIL DAILY Rs. 4
Vol: 13 ● Issue: 198 ● வியாழக்கிழமை ● 08.10.2026 ● சென்னை ●கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● 4 பக்கம் ● விலை ரூ.4





**நடிகர் தனுஷ் 2031 தேர்தலில் போட்டியிட திட்டம்?**

**சட்டம் ஒழுங்கு மிக ஆபத்தான நிலையை நோக்கிச் செல்கிறது: ஸ்டாலின்**

**ஜந்தர் மந்தரில் போராட்டம்: ராகுல் காந்தி அறிவிப்பு**










## 2047க்குள் வளர்ந்த இந்தியாவை
# நிச்சயம் உருவாக்குவோம்: பிரதமர்

**புதுடெல்லி, அக்.07:** இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவது உள்பட நமது இலக்குகள் அனைத்தையும் 2047க்குள் நாம் நிச்சயம் நிறைவேற்று வோம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித் துள்ளார்.

கடந்த 2001ம் ஆண்டின் இதே நாளில் (அக்டோபர் 7) குஜராத் தின் முதல்வராக முதன்முறையாக பொறுப் பேற்றார் நரேந்திர மோடி. மூன்று முறை முதல்வராக பதவி வகித்த அவர், பின்னர் நாட்டின் பிரதமராக பதவி வகித்து வருகிறார். அரசு தலைமைப் பொறுப்பில் 25 ஆண்டு களை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு டெல்லியில் நடைபெற்ற வளர்ந்த இந்தியாவுக்கான சங்கல்ப சபா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: வாக்கு அரசியல் காரணமாக சமூகம் பிளவுபட்டிருப்பது நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று. ஒரு விவசாயியின் வயலில் தண்ணீர் இல்லாவிட்டால், அது ஒரு குறிப்பிட்ட சாதியை மட் ம் பாதிக் குமா? மின்சாரம் இல்லா விட்டால், அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டும் பாதிக்குமா? இல்லை என்பதே இதற்கான பதில். பிரச்சினை அனைவருக்குமானது எனும் போது, அதற்கான தீர்வும் அனைவருக்கு மானதாகவே இருக்க வேண்டும்.



நூறு ஆண்டுகளுக்கு முன்பு நாம் 40 கோடிக்கும் குறைவாக இருந்தோம். இன்று 140 கோடிக் கும் அதிகமாக இருக்கிறோம் 140 கோடி மக்களும் இணைந்து 2047க்குள் வளர்ந்த இந்தி யாவை உருவாக் குவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். உலகின் முதல் 3 பொருளாதாரங்களில் ஒன்றாக நாம் உருவெடுப் போம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். உலக ளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்றுவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். ஒலிம்பிக் போட்டியை நடத்துவோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம்.

விண்வெளிப் பயணத் தை மேற்கொள்வோம். நிச்சயமாக நாம் அதைச் செய்வோம். இந்த ஆற்றல், இந்த உற்சாகம், இந்த நம்பிக்கை அசாதாரண மானவை.

இஸ்ரேல் சென்ற விமா னத்தை விபத்துக்குள்ளாக்க ஃபிளை துபாய் விமானத் தின் துணை விமானி முயன்றபோது, தான் கத்தியால் குத்தப்பட்ட நிலையிலும் அந்த சதியை முறியடித்த இந்திய விமானி ஸ்மித் மச்சார் குறித்தே இன்று உலகம் பேசுகிறது. எதிர்காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானங் களைப் பற்றியும் உலகம் பேசும் ஒரு நாள் வரும்.

தொலைநோக்குப் பார் வையுடன் கூடிய கொள்கை கள் மற்றும் இடைவிடாத கடின உழைப்பின் மூலம் இந்த இலக்குக்குள் அடை யப்படும். இந்தியா சவால் களை எதிர்கொள்ள நேரிடலாம். ஆனால், நம் மிடம் 140 கோடி தீர்வுகள் உள்ளன.

என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் நாட்டு மக்கள் முன் நான் தலை வணங்குகிறேன். என்னைப் பொறுத்தவரை மக்களே கடவுள். கடினமாக உழைக் கும் பாஜக தொண்டர்களே எனது பலம். பாஜக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்ட ணியைச் சேர்ந்த சக ஊழி யர்கள் மற்றும் அனைவருக் கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் மோடி உரையாற்றினார்.



தமிழக முதல்வர் ஜோசப் விஜய் சென்னை மாதாவரம் மத்திய பால் பண்ணைக்கு நேரில் சென்று அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்தபோது அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆவின் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டார். அப்போது பால்வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.விஜயலக்ஷ்மி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.எல். விஜய் பிரபு, செந்தில்குமார் மற்றும் வீட்டு வசதி வாரிய தலைவர் சிவா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மீனவர் நலத்துறை செயலாளர் அனு ஜார்ஜ், பால்வளத்துறை இயக்குநர் சு.சிவராசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதல்வர் விஜய்யின் வெற்றியை செல்லாது என அறிவிக்க முடியுமா ?: சென்னை உயர்நீதிமன்றம்

**சென்னை, அக்.08:** ஆடிட்டர் செய்த தவறுக்காக முதல்வர் விஜய் வெற்றியை செல்லாது என அறிவிக்க முடியுமா? என சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

சட்டசபை தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் முதல்வர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக வேட்பாளர்கள் மற்றும் வாக்கா ளர்கள் தரப்பில் தேர்தல் வழக்குகள் தொடரப்பட்டன. தற்போது விஜய்க்கு எதிரான தேர்தல் வழக் குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. இந்தத் தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி விஜய் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது, சென்னை ஐகோர்ட் நீதிபதி லக்ஷ்மிநாராயணன் கூறியதாவது:

நான் நீதிபதியாகி சொத்து விவரங்களை தாக்கல் செய்தபோது, என் சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்டை நம்பித் தான் செய்தேன். விஜய்யும் தனது சொத்து விவரங்களை அவரது சார்ட்டர்ட் அக்க வுண்டண்ட் மூலம் தாக்கல் செய்திருக்கலாம்.அதில் ரூ.20 30 லட்சம் அளவிலான ஏதே னும் தவறு ஏற்பட்டிருந்தால் அதை மட்டும் வைத்து, அவரது தேர்தல் செல்லாது என அறிவிக்க முடியுமா?



ஆடிட்டர் செய்த தவறுக்காக முதல்வர் விஜய் வெற்றியை செல்லாது என அறிவிக்க முடியுமா? திரையுலகில் சூப்பர் ஸ்டாராக இருந்த ஒருவர் ரூ.600 கோடிக்கும் மேற்பட்ட சொத்துகளை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ள நிலையில், ரூ.2030 லட்சம் விவரங்கள் விடுபட்டிருப்பது மட்டும் அவரது தேர்தல் வெற்றியை பாதிக்குமா?

இவ்வாறு மனுதாரர் தரப்பு வழக்கறிஞரிடம் உயர்நீதிமன்ற நீதிபதி கேள்வி எழுப்பினார்.

## ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி
# ஜந்தர் மந்தரில் போராட்டம்

**புதுடெல்லி, அக்.08:** தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக் கள், டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தை தொடங்க உள்ளனர்.

ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்பிக் கள் சுமார் 300 பேர் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணையம் நோக்கி பேரணியாகச் சென்றனர். போராட்டத்தில் ஈடுபட்ட ராகுல் காந்தி உள்ளிட் டோர் கைது செய்யப் பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், முக்கிய எதிர்க் கட்சி எம்பிக்களுக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே டெல்லியில் இன்று மதிய விருந்தளித்தார். இதில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, ராஷ்ட்ரிய ஜனதா தள எம்பி மனோஜ் ஜா, சிபிஎம் எம்பி ஜான் பிரிட்டாஸ், விசிக தலைவர் திருமாவளவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, “நேற்று நான் கூறியதுபோல சுமார் 300 எம்பிக்கள் தலைமைத் தேர்தல் ஆணையரைச் சந்திக்க விரும்பினர். ஆனால், அங்கு போராட்டம் நடத்த முடியாது என்று அவர்கள் கூறிவிட்டனர். எனவே, போராட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட ஜந்தர் மந்த ருக்குச் சென்று அங்கு மீண்டும் ஒன்றுகூடி அமர்ந்து, ஞானேஷ் குமார் நாட்டின் முறையான தேர்தல் ஆணையர் அல்ல என்பதை நாட்டுக்கு தெரிவிக்க திட்டமிட்டுள்ளோம். ஞானேஷ் குமார் பதவி விலகியே ஆக வேண்டும்.” என தெரிவித்தார்.

ஆகாஷ்வாணி பவனுக்குள் அத்து மீறி நுழைந்ததாக உங்கள் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளதே என்ற செய்தியாளர் களின் கேள்விக்கு பதில் அளித்த ராகுல் காந்தி, “எனக்கு எதிராக ஏற்கெனவே 45 வழக்குகள் உள்ளன. என் இலக்கு 100 வழக்குகளைப் பெறு வதுதான். எனக்கு எதிராக 100 வழக்கு கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒவ்வொரு வழக்கும் எனக்கு ஒரு பதக்கத்தைப் போன்றது” என தெரிவித்தார்.





பிரதமர் மோடி, தனது நீண்ட நெடிய பொதுவாழ்வுப் பயணத்தை நினைவுகூரும் வகையில் டெல்லி சரோஜினி நகரில் உள்ள பிரபல விநாயகர் கோயிலுக்குச் சென்று வழிபாடு மேற்கொண்டார். சரோஜினி நகரில் அமைந்துள்ள இந்த விநாயகர் கோயில் தென்னிந்திய மக்களால் மிகவும் பிரபலமாகப் போற்றப்படும் ஆலயமாகும். இங்கு தென்னிந்திய முறைப்படி பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. கோயிலுக்குச் சென்ற பிரதமர் மோடி, அங்குள்ள பிள்ளையார் சன்னிதி, நவக்கிரக சன்னிதி உள்ளிட்ட பல்வேறு சன்னிதிகளில் வழிபாடு செய்தார்.

சிகரத்தின் தினத்தென்றல்

# டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வு பணியிடங்களை 15,000ஆக அதிகரிக்க வேண்டும்: அன்புமணி

**சென்னை, அக்.08:** “அரசுத் துறைகளில் 2 லட்சத்திற்கும் கூடுதலான குரூப் 4 பணியிடங்கள் காலியாக இருக்கும் சூழலில், நடப்பாண்டிலும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான பணியிடங்களே நிரப்பப்படவிருப்பது ஏமாற்றமளிக்கிறது. குரூப் 4 தேர்வு பணியிடங்களை 15,000 ஆக அதிகரிக்க வேண்டும்” என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் 2026 ஆம் ஆண்டுக்கான தொகுதி 4 போட்டித் தேர்வுகளின் மூலம் 46 பணிகளுக்கு மொத்தம் 6,574 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர் என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) அறிவித்துள்ளது.

அரசுத்துறைகளில் 2 லட்சத்திற்கும் கூடுதலான நான்காம் தொகுதி பணியிடங்கள் காலியாக இருக்கும் சூழலில், நடப்பாண்டிலும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான பணியிடங்களே நிரப்பப்படவிருப்பது ஏமாற்றமளிக்கிறது.

முதலாம் தொகுதி பணிகளுக்கு இரட்டை இலக்கத்திலும், பிற பணிகளுக்கு 3 இலக்கத்திலும் மட்டுமே பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் நிலையில், நான்காம் தொகுதி பணிகளுக்கு மட்டுமே ஆயிரக்கணக்கில் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதால், அதற்கான அறிவிப்பையே இளைஞர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

நான்காம் தொகுதி பணிக்கான ஆள்தேர்வு மிகக்குறைந்த காலியிடங்களே அறிவிக்கப்பட்டிருப்பதால், இளைஞர்களுக்கு ஏமாற்றமே விஞ்சியுள்ளது. நான்காம் தொகுதி பணியிடங்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 2 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது. அந்த இடங்கள் அனைத்தையும் நிரப்பாவிட்டாலும், ஒவ்வோர் ஆண்டும் அதில் 10 விழுக்காடு இடங்களையாவது நிரப்ப வேண்டும் என்பது தான் இளைஞர்களின் எதிர்பார்ப்பாகும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்வின் மூலம் 4,662 இடங்கள் நிரப்பப்பட்டன. அதாவது கடந்த 6 ஆண்டுகளில் 23,733 நான்காம் தொகுதி பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. ஆண்டுக்கு 3,955 பணியிடங்களை மட்டுமே நிரப்புவது எந்த வகையிலும் போதுமானதல்ல.

2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின் போது, திமுக ஆட்சிக்கு வந்தால் மூன்றரை லட்சம் காலிப் பணியிடங்களை நிரப்புவதன் மூலமாகவும், இரு லட்சம் புதிய பணியிடங்களை ஏற்படுத்துவதன் வாயிலாகவும் மொத்தம் ஐந்தரை லட்சம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று திமுகவின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஐந்தாண்டு பதவிக்காலத்தில் 94,191 பேருக்கு மட்டுமே அரசு வேலைகள் வழங்கப்பட்டன. அரசு வேலைகளை வழங்குவதில் திமுக அரசு தோல்வியடைந்தது.

திமுக அரசின் இந்த தோல்வியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தான், நாங் கள் ஆட்சிக்கு வந்தால் அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படும் என்று 2026 தேர்த லின் போது தவெக வாக்குறுதி அளித்தது.

அதை நிறைவேற்றும் வகையில், நடப்பாண்டில் மிக அதிக எண்ணிக்கையில் நான்காம் தொகுதி பணியிடங்கள் நிரப்பப்படும் என்று படித்த இளைஞர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், முந்தைய திமுக ஆட்சியைப் போலவே தவெக ஆட்சியிலும் மிகக்குறைந்த எண்ணிக்கையில் தொகுதி 4 பணியிடங்கள் நிரப்பப்படுவது இளைஞர்களுக்கு எந்த வகையிலும் பயனளிக்காது.

# திமுக மலிவான அரசியல் செய்கிறது

## போலி நாடகத்தின் சாயம் வெளுத்தது: அமைச்சர் அருண்ராஜ்

**சென்னை, அக்.08:** மாத்திரை கவர் விவகாரத்தில் திமுக மலிவான அரசியல் செய்கிறது; போலி நாடகத்தின் சாயம் வெளுத்தது என அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

எதற்கெடுத்தாலும் மொழியை வைத்து மலிவான அரசியல் பிழைப்பு நடத்தும் திமுகவினர், தற்போது கரூர் மற்றும் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாத் திரை உறைகளைக் கையில் எடுத்து, தாங்கள் செய்த வரலாற்றுப் பிழையை மறைத்து இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி முதலைக்கண்ணீர் வடிப்பதற்கு எங்கள் கடும் கண்டனங்கள்.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மாத்திரை கவர்கள் பொதுவாக மத்திய சிறையில் இருந்து பெறப்பட்டு, அதில் 'காலை / மதியம் / இரவு' போன்ற குறிப்புகள் தமிழ் மொழியில் மட்டுமே முத்திரையிடப்பட்டு வழங்கப்படுவது வழக்கம்.

கடந்த டிசம்பர் 2025ல், மத்திய சிறையிலிருந்து வரும் கவர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், ஈரோடு மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சங்கம் மூலம் 4 லட்சம் கவர்கள் அச்சிட கடந்த திமுக ஆட்சியில் அவசர ஆணை வழங்கப்பட்டு, அந்த கவர்கள் 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் திமுக ஆட்சிக் காலத்திலேயே மக்களிடம் புழக்கத்திற்கு வந்துவிட்டன.

அதேபோல் கோவையில் சரியாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது திமுக ஆட்சியில்தான் அலுவலக நடைமுறையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு, சிந்தாமணி கூட்டுறவு நிறுவனம் மூலம் அச்சிடப்பட்டு நடைமுறைக்கே கொண்டு வரப்பட்டது.

தங்கள் ஆட்சியிலேயே ஹிந்தியை அனுமதித்து, அதற்கான டெம்பிலேட் உருவாக்கி, நோயாளிகளிடமும் புழக்கத்திற்கு விட்டுவிட்டு, இப்போது ஆளுங்கட்சி மீது பழி போடுவது எந்த வகையிலான அரசியல்?

தங்கள் ஆட்சியிலேயே இவை புழக்கத்திற்கு வந்தபோது வாய்மூடி, கைகட்டி மவுனமாக இருந்த திமுகவினர், இப்போது திடீரென மொழிப்போர் காவலர்கள் போல் வேடம் போடுவது ஏன்? தாங்களே ஹிந்தியைத் திணித்துவிட்டு, இப்போது அதனை ஒரு பூதாகரமான பிரச்னையாக மாற்றி அரசியல் குளிர்காய நினைப்பது திமுகவின் அப்பட்டமான பித்தலாட்டம்.

திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அந்த வடிவமைப்பிலோ அல்லது மொழியிலோ எந்த மாற்றமும் செய்யவில்லை. தாங்கள் செய்த துரோகத்தை மறைக்க, எங்கள் மீது அபாண்டமாகப் பழிபோடும் திமுகவின் கேவலமான அரசியல் தந்திரம் இது.

இந்த விவகாரம் அரசின் கவனத்திற்கு வந்தவுடனேயே, கரூர் மற்றும் கோவை ஆகிய இரு இடங்களிலும் அந்த மாத்திரை உறைகளின் பயன்பாடு உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

இரு மொழிக் கொள்கையை பெயரள வில் இல்லாமல், தன் உயிர் மூச்சாகக் கடைபிடித்து வரும் ஒரே இயக்கம் தமிழக வெற்றிக் கழகம். இதில் எப்போதும் சமரசம் செய்ய மாட்டோம்.

பொய்களை மட்டுமே மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்து பழகிப்போன திமுகவினர் இனிமேலாவது இதுபோல் மலிவான அரசியலை விடுத்து ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படுவார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



முதல்வர் ஜோசப் விஜய் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு நேரில் சென்று பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

### ‘நிலைகுலைந்த சதிகாரர்கள்’

# ராகுல் மீதான எப்ஐஆர் பதிவுக்கு ஜெயராம் ரமேஷ் கண்டனம்

**புதுடெல்லி, அக்.08:** சிறப்புத் தீவிர திருத்தத்தின் மூலம் சதிச் செயலில் ஈடுபட்டவர்கள் தற்போது நிலைகுலைந்து போயுள்ளதாகவும், அதன் காரணமாகவே அவர்கள் ராகுல் காந்திக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளனர் என்றும் காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “ஒருபுறம் பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா, மறுபுறம் தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோர் சேர்ந்து தீட்டிய வாக்குத் திருட்டு சதியை, மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடந்த இரண்டு ஆண்டுகளாக உறுதியான ஆதாரங்களுடன் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறார்.

அதிகார மமதை கொண்ட ஆட்சியாளர்களின் தூண்டுதலால் வாக்காளர் பட்டியலில் இருந்து அநீதியான முறையில் லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு, அவர்களின் அரசியலமைப்பு ரீதியிலான வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது.

இந்த அநீதியை நாட்டுக்கு வெளிச்சம் போட்டுக்காட்ட எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சத்தியாகிரப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். ஆனால், டெல்லி காவல் துறை அவர் மீதும், பிற தலைவர்கள் மீதும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளது. சதியில் ஈடுபட்ட இந்த தரப்பினர் இப்போது நிலைகுலைந்து, செய்வதறியாது தவித்து வருகின்றனர்” என தெரிவித்துள்ளார்.

### ஜெம் வீரமணி வழக்கு:

# போலீஸ் அதிகாரிகளின் பங்கு குறித்து சிறப்பு புலனாய்வு குழு விசாரணை

## உயர் நீதிமன்றத்தில் காவல் துறை தகவல்

**சென்னை, அக்.08:** ஜெம் வீரமணி மீதான போக்சோ வழக்கில், காவல் துறை உயர் அதிகாரிகளின் பங்கு குறித்தும் சிறப்பு புலனாய்வு குழு விசாரித்து வருவதாக காவல் துறை தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஜெம் வீரமணி மீதான வழக்கில் முன்னாள் காவல் ஆணையர் அருணின் தலையீட்டின் காரணமாக, வீரமணி, சாந்தியின் பெயர் புகாரில் குறிப்பிட்டிருந்தும் காவல் துறையினர் சரிவர விசாரிக்காததால், வழக்கை சிபிஐக்கு மாற்றக் கோரி, வாராகி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், வழக்கை மூட 40 கோடி ரூபாய் வரை பணம் கைமாறியுள்ளதால், வழக்கை மூடியது குறித்தும் விசாரிக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், வழக்கு தொடர்பான ஆதாரங்களை சிறப்பு புலனாய்வு குழுவுக்கு வழங்கும்படி வாராகிக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு, நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, வாராகி தரப்பில், உயர் நீதிமன்ற உத்தரவின்படி, அக்டோபர் 1 மற்றும் 6ஆம் தேதிகளில் சிறப்பு புலனாய்வு குழு முன் ஆஜராகி, ஆதாரங்களை சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறப்பு புலனாய்வு குழு தரப்பில், ‘வழக்கின் விசாரணையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளது. மனுதாரர் கூறிய குற்றச்சாட்டுகள் குறித்தும் விசாரணை நடந்து வருகிறது. விசாரணை நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அடுத்த கட்ட அறிக்கை தாக்கல் செய்ய 10 நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும்’ என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

‘விசாரணை முறையாக நடந்து வருவதால் சிபிஐ விசாரணை தேவையில்லை. வழக்கை போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.பத்மா சிறப்பாக விசாரித்து வருகிறார்’ என பாராட்டு தெரிவித்த நீதிபதி, காவல் துறை தரப்பில் அடுத்த கட்ட அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் வழங்கி, விசாரணையை அக்டோபர் 26ஆம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜை நேரில் அழைத்து பாராட்டிய தனுஷ்

**சென்னை, அக்.08** ஆசிய விளையாட்டுப் போட்டியில் மூன்று பதக்கங்கள் வென்ற வித்யா ராம்ராஜை நேரில் அழைத்து நடிகர் தனுஷ் பாராட்டு தெரிவித்துள்ளார்.



ஜப்பானில் நடந்து முடிந்த 20வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் மகளிருக்கான 4ஜ்400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியின் இறுதிச் சுற்றின் இறுதிப் பகுதியில் அபாரமாக ஓடி தங்கம் வெல்லும் இந்தியாவின் கனவை நனவாக்கினார்.

அதேபோல் கலப்பு 4ஜ்400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தவர், 400 மீட்டர் தடை ஓட்டத்தில் 54.75 விநாடிகளில் இலக்கைக் கடந்து வெண்கலம் வென்றதுடன், ஜாம்பவான் பி.டி. உஷாவின் 42 ஆண்டுகால தேசிய சாதனையை முறியடித்திருந்தார்.

இந்தநிலையில், இவர் அக்டோபர் 3ம் தேதி சொந்த ஊரான கோவைக்கு திரும்பினார். ஆசிய விளையாட்டு போட்டியில் சாதனை படைத்து திரும்பி இருக்கும் தடகள வீராங்கனை வித்யாவை அரசியல் தலைவர்கள் பாராட்டி வரும் நிலையில், தற்போது நடிகர் தனுஷ், அவரை நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்துள்ளார்.



தி.மலையில் வன உயிரின வார விழாவை ஒட்டி ஒப்படைக்கப்பட்ட நாட்டு துப்பாக்கிகள் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ரோடு ரோலரால் அழிக்கப்பட்டன.

# வேதியியலுக்கான நோபல் பரிசு இருவருக்கு பகிர்ந்தளிப்பு

**ஸ்டாக்ஹோம், அக்.08::** மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் உலக அமைதிக்காக பாடுபட்டோருக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. 2026ம் ஆண்டுக்கான பரிசு அறிவிக்கப்படுகின்றன.




மருத்துவம் மற்றும் இயற்பியல் துறைகளில் அறிவிக்கப்பட்டு விட்டன. இன்று வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இதன்படி பிரான்சை சேர்ந்த ஹென்றி பி காகன் மற்றும் ஜப்பானை சேர்ந்த கென்சோ சோய் ஆகியோருக்கு இந்த பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது. சீரற்ற கரிமத் தொகுப்பு முறை குறித்த ஆய்வுக்காக இந்தப் பரிசை இருவரும் பெறுகின்றனர்.

# நகராட்சி, மாநகராட்சி பணியாளர்கள் முதல் முறையாக டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்வு

**சென்னை, அக்.06:** தமிழகத்தில் நகராட்சி, மாநகராட்சி பணியாளர்கள் முதன் முறையாக டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அண்மையில் நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத்தொடரின் போது, நகர்ப்புற உள்ளாட்சிகளின் பணியாளர்களையும் டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்வு செய்யும் வகையில் தமிழக அரசு சட்டத்தை இயற்றியது. அதற்கு ஆளுநரும் ஒப்புதல் அளித்தார். இதைத்தொடர்ந்து அச்சட்டம் உடனடியாக அமலுக்கு வந்தது. இந்தச் சூழலில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வில் நகராட்சி, மாநகராட்சி இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், நேர்முக எழுத்தர் பணி யிடங்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாடு நகராட்சி கவுன்சில் பணியின்கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் 119 காலியிடங்களும், வருவாய் உதவியாளர் பதவியில் 96 காலியிடங்களும், தட்டச்சர் பதவியில் 260 இடங்களும், சுருக்கெழுத்து தட்டச்சர் (கிரேடு3) பதவியில் 16 இடங்களும் உள்ளன. தமிழ்நாடு மாநகராட்சி பணியின்கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் 70 காலியிடங்களும், நேர்முக எழுத்தர் பதவியில் 60 இடங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் 134 காலியிடங்களும், பில் கலெக்டர் பதவியில் 107 காலியிடங்களும், தட்டச்சர் பதவியில் 56 காலியிடங்களும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியில் 28 இடங்களும் உள்ளன. இளநிலை உதவியாளர் பதவிக்கு 10ம் வகுப்பு தேர்ச்சி கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




இதற்கிடையே, குரூப்4 தேர்வு தொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் பானோத் ம்ருகேந்தர் லால் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ஒருங்கிணைந்த குரூப்4 தேர்வுக்கான அறிவிக்கை தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. தேர்வர்கள் நவ.5ம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். தேர்வுக் கட்டணத்தை யுபிஐ வசதி மூலம் ஆன்லைனில் செலுத்தலாம்” என கூறியுள்ளார்.

சிகரத்தின்
தினத்தென்றல்



# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மிக மிக ஆபத்தான நிலையை நோக்கிச் செல்கிறது

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

**சென்னை, அக்.08:** "தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு மிக மிக ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. முதல்வர் சாக்கு போக்கு சொல்லித் தப்பிக்கும் காலம் எல்லாம் கடந்துவிட்டது. உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "தவெக ஆட்சியில் மின்வெட்டை மிஞ்சும் அளவுக்கு அரிவாள் வெட்டு தலைதூக்கியுள்ளது. சட்டம் ஒழுங்கு சீரழிந்து ரத்தச் சகதியில் தமிழ்நாடு சிக்கியுள்ளது.

குற்றவாளிகள் தைரியமாகவும் பொதுமக்கள் அச்சத்தோடும் வாழும் சூழலுக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளதற்குச் சான்றாக கடந்த 24 மணி நேரத்தில் வெளியாகிய அதிர்ச்சிச் செய்திகள் அமைந்துள்ளன.

சென்னை மயிலாப்பூரில் 19 வயது இளைஞர் சத்தியசீலன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். திருத்தணியில் தனது 17 வயது



மகளுக்குத் தொல்லை கொடுத்த நபர் மீது காவல் நிலையத்தில் புகாரளித்த தந்தை அவரது வீட்டின் முன்பே வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்ததால் இந்தக் கொலை நிகழ்ந்திருக்கிறது

சேலத்தில் வீட்டில் தனியாக இருந்த ஜனாபாய் எனும் மூதாட்டி பகலிலேயே கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலையாளிகள் அவரது நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையத்தில் ஜாமீன் கையெழுத்து போட்டுவிட்டுத் திரும்பும் போதே வீரபத்திரன் என்பவர் மர்ம நபர்களால் மனைவி முன்பு வைத்துச் சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே மது போதையில் நிர்வாணமாக்கி வாலிபர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சோழவந்தானில் டாஸ்மாக் கடை அருகே பைக்கில் வந்த சியாம் சுந்தர்ராஜன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். எண்ணூர் ரயில் நிலையத்திலேயே மாணவர்களை வெட்ட முயற்சி நடந்துள்ளது.

வடக்கு, தெற்கு, மேற்கு, தலைநகர் என எல்லா திசைகளிலும் குற்றச் சம்பவங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன. பட்டப்பகல், நள்ளிரவு எனப் பாகுபாடு இல்லாமல் தமிழ்நாடு இரத்தத்தில் தோய்ந்து போயுள்ளது. வீட்டிலும் பாதுகாப்பில்லை, வெளியிலும் பாதுகாப்பில்லை என்ற நிலையில் மக்கள் பரிதவித்துக் கிடக்கின்றனர்.

காவல்துறையினரால் ரோந்துப் பணி மேற்கொள்ளப் படுகிறதா இல்லையா?

சிங்கப்பெண் அதிரடிப் படையினர் ரீல்ஸ் போடுவதில் காட்டும் ஆர்வத்தைப் பெண்களின் பாதுகாப்பில் காட்டுவார்களா மாட்டார்களா?

காவல் நிலையத்தில் புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் புகார் தெரிவித்தவர்களே கொலைக்கு உள்ளாகும் அராஜகத்துக்கு முடிவு எப்போது?

குற்றவாளிகள் கண்காணிக்கப்படுகிறார்களா இல்லையா? கண்காணிப்பு இல்லாமல் போனதைத்தானே திண்டுக்கல் மாவட்டக் கொலைச் சம்பவம் காட்டுகிறது? தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நாளாக, நாளாக மிக மிக ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. மக்களின் உயிரைக் காப்பதில் கவனம் செலுத்த வேண்டிய முதல்வரின் கவனம் மொத்தமும் தனது நாற்காலியைக் காப்பாற்றுவதிலேயே இருக்கிறது. அதற்கான விலையாக அப்பாவி மனித உயிர்கள் பலி கொடுக்கப்பட்டு வருகின்றன.

காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வர் நிலைமையின் வீரியத்தை உணர வேண்டும். சாக்கு போக்கு சொல்லித் தப்பிக்கும் காலம் எல்லாம் கடந்து விட்டது. 'Take - Action' #ShootingModeஇல் இருந்து விடுபட்டு, தயவு செய்து நடவடிக்கை எடுங்கள் முதல்வரே!" என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## பழநி ரூ.100 கோடி நில மோசடி:

# தலைமறைவாக இருந்த பத்திர எழுத்தர் உட்பட 2 பேர் கைது





திண்டுக்கல், அக்.08: பழநியில் ரூ.100 கோடி நிலமோசடி வழக்கில் கடந்த 2 மாதமாக தலைமறைவாக இருந்த பத்திர எழுத்தர் உட்பட 2 பேரை சிபிசிஐடி போலீஸார் கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி அடிவாரம் பகுதியில் உள்ள தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள நிலம் ரூ.2 கோடிக்கு சட்ட விரோதமாக 2 தனி நபர்களுக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக 88 பேரிடம் விசாரணை நடத்திய சிபிசிஐடி போலீஸார் 11 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இவ்வழக்கில் தொடர்புடைய சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், முருகதாஸ், இடைத்தரகர் ஜெயப்பிரகாஷ் உட்பட இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில், வழக்கறிஞர் அன்வர்தீன் சிறையிலேயே உயிரிழந்தார்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பத்திர எழுத்தர் சிவக்குமார் உட்பட 5 பேர் தலைமறைவாக இருந்தனர். அவர்கள் குறித்த எந்தத் தகவலும் தெரிய வராததால் போலீஸாரால் அவர்களை நெருங்க முடியவில்லை.

அதனால் கடந்த 2 மாதமாக அந்த 5 பேரையும் கண்டுபிடிக்க முடியாமல் சிபிசிஐடி போலீஸார் திணறி வந்தனர்.

இதேபோல், இந்த மோசடிக்கு மூளையாக செயல்பட்ட முக்கிய புள்ளி குறித்தும் ஆதாரப்பூர்வமான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

அதே நேரத்தில் இந்த மோசடி தொடர்பாக முக்கிய குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்துவிட்டதால், இதுவரை நடத்திய விசாரணை அடிப்படையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவும் சிபிசிஐடி போலீஸார் திட்டமிட்டிருந்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை (அக்.7) காலை, பத்திரப்பதிவுக்கு உடந்தையாக இருந்த பதிவுத்துறை இளநிலை உதவியாளர் சிவசங்கரி, கடந்த 2 மாதமாக தலைமறைவாக பத்திர எழுத்தர் சிவக்குமார் ஆகிய 2 பேரையும் அவர்களது வீடுகளில் வைத்து சிபிசிஐடி போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மோசடி தொடர்பாக ஏற்கெனவே இளநிலை உதவியாளர் சிவசங்கரி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமன ஆணை வழங்க வேண்டும்

## முன்னாள் நீதிபதி அரிபரந்தாமன் வலியுறுத்தல்



**சென்னை, அக்.06:** 'அனைத்து சாதியினருக்கும் உடனடியாக அர்ச்சகர் பணி நியமனம் வழங்க வேண்டும்' என உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அரிபரந்தாமன் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த 2006ல் பிறப்பிக்கப்பட்ட அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் அரசாணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், 2015ல் உச்ச நீதிமன்றம் ரத்து செய்யவில்லை.

தகுதியும் பயிற்சியும் பெற்ற இந்துக்கள் அனைவரும் அர்ச்சகராகலாம் என்பதை உறுதி செய்தது. தொடர்ந்து, கடந்த 2020ம் ஆண்டு அதிமுக ஆட்சியில் வெளியிடப்பட்ட புதிய இந்து சமய அறநிலையத் துறை சேவை விதிகளின்படி, 2021ல் திமுக அரசு 28 பேரை அர்ச்சகராக நியமித்தது.

அதைத்தொடர்ந்து, சேவை விதிகளை எதிர்த்த வழக்கில், ஆகமக் கோயில்களைப் பிரித்தறிய 2022ம் ஆண்டு உயர் நீதிமன்றமே 5 நபர் குழு அமைத்தபோது தமிழக அரசு அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யாமல் வேடிக்கை பார்த்தது. மேலும், அக்குழுவில் அரசு பரிந்துரைத்த சைவப் பேராசிரியர் சத்தியவேல் முருகனாருக்கு மனுதாரர்கள் எதிர்ப்பு தெரிவித்தபோது, அரசு தரப்பு எவ்வித எதிர்ப்பும் இன்றி அவரை நீக்க ஒப்புக்கொண்டது வெட்கக்கேடானது.

ஆகமத்தை விட அரசியலமைப்பே மேலானது என்பதால், அரசு பயிற்சி பெற்ற அனைத்து சாதியினருக்கும் உடனடியாகப் அர்ச்சகருக்கான பணி நியமன ஆணைகளை வழங்க வேண்டும். தேவைப்பட்டால் சட்டப்பேரவையில் புதிய சட்டம் இயற்றி உச்ச நீதிமன்றத்தில் உறுதியோடு வாதாட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# விமானப் படை தளபதியாக அசுதோஷ் தீட்சித் நியமனம்

## கார்கில் போரில் பங்காற்றியவர்



**புதுடெல்லி, அக்.08:** இந்திய விமானப் படையின் புதிய தளபதியாக ஏர் மார்ஷல் அசுதோஷ் தீட்சித் நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய விமானப் படையில் தற்போது தளபதியாக உள்ள ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் அக்டோபர் 31ம் தேதியுடன் பணிநிறைவு பெற உள்ளார். இந்த நிலையில் புதிய தளபதியாக ஏர் மார்ஷல் அசுதோஷ் தீட்சித் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'தேஜஸ்' போர் விமானங்கள் மற்றும் உள்நாட்டு விமானத் திட்டங்களை விமானப் படையில் தீவிரமாக ஊக்குவித்ததில் இவர் முக்கியப் பங்காற்றியவர்.

மிராஜ்2000, மிக் ரகங்கள், கிரண், ஹாக் மற்றும் தேஜஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான போர் விமானங்களில் 3,500 மணி நேரத்துக்கும் மேலாகப் பறந்த அனுபவம் கொண்டவர். சுமார் நான்கு தசாப்த கால தற்காப்புப் பணியில், கார்கில் போரின்போது நடந்த 'ஆபரேஷன் சஃபேத் சாகர்', 'ஆபரேஷன் ரக் ஷக்' மற்றும் 'ஆப ரேஷன் சிந்தூர்' உள்ளிட்ட முக்கிய ராணுவ நட வடிக்கைகளில் இவர் தீவிரமாகப் பங்காற்றியுள்ளார்.

## புளியரை நெல் கொள்முதல் நிலையத்தில்

# நெல் அளவீடு செய்ய பணியாளர்கள் இல்லாததால் விவசாயிகள் கடும் சிரமம்!



**தென்காசி, அக்.08** தென்காசி மாவட்டம் செங்கோட்டை அடுத்து புளியரை நெல் கொள்முதல் நிலையத்தில் கடந்த மூன்று நாட்களாக நெல் அளவீடு செய்ய பணியாளர்கள் இல்லாததால் விவசாயிகள் கடும் சிரமத்தில் உள்ளனர்.

ஒரு காலத்தில் முப்போகமும் விளைந்த புளியரை மண்ணில், இயற்கை மாற்றங்களால் இன்று ஒரு போகம் விளைவிப்பதே விவசாயிகளுக்கு போராட்டமாக உள்ளது. மழையின்றி போராடி விளைவித்த நெல்லை அறுவடை செய்த பின்னர், தற்போது மாலை நேரங்களில் பெய்யும் மழையிலிருந்து அதைக் காப்பாற்றவும் விவசாயிகள் போராடி வருகின்றனர்.

அரசு கொள்முதல் நிலையத்தில் நெல்லை விற்று உரிய பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கொண்டு வந்தாலும், இங்கும் பணியாளர்கள் இல்லாமல் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் உடனடியாக தலையிட்டு, புளியரை நெல் கொள்முதல் நிலையத்தில் பணியாளர்களை நியமித்து, விவசாயிகளின் நெல்லை தாமதமின்றி கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இயற்கை வள பாதுகாப்பு சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## போலியாக உச்ச நீதிமன்ற உத்தரவை தயாரித்து

# ஆயுள் கைதியை விடுவித்த கர்நாடக டிஐஜி கைது



**பெங்களூரு, அக்.08:** போலியாக உச்ச நீதிமன்ற உத்தரவு நகலை தயாரித்து ஆயுள் தண்டனை கைதியை விடுதலை செய்த வழக்கில் கர்நாடக சிறைத்துறை டிஐஜி சோமசேகர் கைது செய்யப்பட்டார்.

பெங்களூருவில் உள்ள சிக்பேட்டையை சேர்ந்தவர் சங்கர் ஆறுமுகம் (42). இவர் கடந்த 2001ம் ஆண்டு பணத்துக்காக ஆட்களை கடத்தி மிரட்டிய வழக்கில் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கை விசாரித்த விரைவு நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. இதையடுத்து, சங்கர் ஆறுமுகம் பெங்களூரு மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், விரைவு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து அவர் கர்நாடக உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்தார். இந்த இரு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

ஆனால், சங்கர் ஆறுமுகம் தரப்பில், 2018ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் இருந்து அவரை விடுதலை செய்திருப்பதாக போலியான தீர்ப்பு நகலை தயாரித்து, சிறையில் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது, சிறைத் துறை கண்காணிப்பாளராக இருந்த சோமசேகர், சங்கர் ஆறுமுகத்தை 2018ம் ஆண்டு நவ.13ம் தேதி சிறையில் இருந்து விடுவித்தார்.

இந்நிலையில், கடந்த 2022ம் ஆண்டு பெங்களூரு மத்திய சிறையில் பணியாற்றும் மூத்த அதிகாரி ஒருவர், கர்நாடக மாநில சிறைத்துறை டிஜிபிக்கு புகார் ஒன்றை அளித்தார். அதில், சிறை கண்காணிப்பாளர் சோமசேகர் போலியாக உச்ச நீதிமன்ற தீர்ப்பு நகலை தயாரித்து ஆயுள் தண்டனை கைதி சங்கர் ஆறுமுகத்தை விடுதலை செய்ததாக குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த புகார் கடந்த 4 ஆண்டுகளாக விசாரிக்கப்படாமல், கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்நிலையில், கடந்த 6 மாதங்களுக்கு முன்பு புதிய சிறைத்துறை டிஜிபியாக பொறுப்பேற்ற அலோக் மார், இதுகுறித்து விசாரிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

விசாரணையில், சிறையின் தலைமைக் காவலராக இருந்த ஸ்ரீகாந்த் போலியாக உச்ச நீதிமன்ற தீர்ப்பு நகலை தயாரிக்க உதவியது தெரிய வந்தது. சிறையின் கண்காணிப்பாளராக இருந்த சோமசேகருக்கு தெரிந்தே அவர், இந்த மோசடி செய்தது கண்டு பிடிக்கப்பட்டது. அந்த போலியான தீர்ப்பு நகலின் அடிப்படையில் சங்கர் ஆறுமுகத்தை அவர் விடுதலை செய்தது உறுதியானது.

இதுகுறித்து, சங்கர் ஆறுமுகத்தின் மனைவியிடம் விசாரித்த போது, தனது கணவரை விடுதலை செய்ய ரூ.20 லட்சம் லஞ்சம் கொடுத்ததாக வாக்கு மூலம் அளித்தார்.

இதையடுத்து, போலீஸார் சிறைத் துறை டிஐஜியாக இருந்த சோமசேகரை கைது செய்தனர்.

# "மானிய அறிவிப்பால் சூரிய மின் உற்பத்திக்கு 20,000 பேர் விண்ணப்பம்"

## அமைச்சர் நிர்மல் குமார் தகவல்



**சென்னை, அக்.08:** வீட்டு பயன்பாட்டுக்கான சூரிய மின்சக்தி திட்டத்துக்கு மத்திய அரசோடு இணைந்து மாநில அரசும் மானியம் வழங்கும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து, இது தொடர்பாக 20,000 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதாக தமிழக மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "வீட்டு பயன்பாட்டுக்கான சூரிய மின்சக்தி (சோலார்) உற்பத்தி திட்டத்துக்கான மானியம் குறித்து முதல்வர் விஜய் இரண்டு வாரங்களுக்கு முன்பு சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார். ஆன்லைன் முறையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான போர்ட்டல் இரு வாரங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இரண்டு வாரங்களில் 20 ஆயிரம் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசின் மானியம் மற்றும் மாநில அரசின் மானியம் இரண்டும் பயனாளிகளுக்குக் கிடைக்கும். தமிழகம் முழுவதும் சோலார் பேனல்களை விற்பனை செய்யும் சுமார் 1,500 விற்பனையாளர்களுடன் இன்று ஆலோசனை நடத்தப்பட்டது. இதில், சோலார் பேனல்களை பொருத்தும் பணிகளை ஆன்லைன் முறையில் எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது.

மானியம் பெறத் தகுதியான 1,500 பேருக்கு மானியத்தை விடுவிப்பதற்கான பணிகள் நடைபெறுகிறது. இவ்வாறு ஒவ்வொரு கட்டத்திலும் நடைபெற வேண்டிய பணிகளை விரைவாக முடிப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. தற்போது தமிழக அரசின் மானிய அறிவிப்பை அடுத்து இரண்டு வாரங்களில் 20 ஆயிரம் விண்ணப்பங்கள் வந்திருப்பது, இத்திட்டத்துக்கு கிடைத்த வரவேற்பையே காட்டுகிறது.

## தென்காசி மாவட்டம் அச்சன்புதூரில்

# 133 கிலோ புகையிலைப் பொருட்கள் பறிமுதல்




**தென்காசி, அக்.08:** தமிழக அரசால் தடை செய்யப்பட்ட சுமார் ரூ94,400 மதிப்பிலான 133 கிலோ எடை கொண்ட புகையிலைப் பொருட்களை அச்சன்புதூர் காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

தென்காசி மாவட்டத்தில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களின் புழக்கத்தை முற்றிலும் தடுக்கும் விதமாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அசோக்குமார் அவர்களின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்பேரில் அச்சன்புதூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அச்சன் புதூர் – காசிதர்மம் மெயின்ரோட்டில் காவல்துறையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த காரை சோதனை செய்ததில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருப்பது தெரியவந்தது.

இதனைக் கடத்தி வந்த அச்சன் புதூரைச் சேர்ந்த கனியப்பா மகன் சாகுல் ஹமீது (44), சாகுல் ஹமீது மகன் தாஜ்தீன் (47) ஆகிய 2 நபர்களை கைது செய்து, வழக்கு பதிவு செய்தனர். மேலும் அவர்களிடமிருந்த ரூ.94,400 மதிப்பிலான 133 கிலோ எடை கொண்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்து, வழக்குப் பதிவு செய்து மேற்படி இரண்டு நபர்களையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

## நீட் முதுநிலை மருத்துவ சேர்க்கை குறித்து

# 3 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி, அக்.08:** நீட் முதுநிலை மருத்துவ சேர்க்கை குறித்து 3 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2025–26 கல்வி ஆண்டுக்கான நீட் முதுநிலை சேர்க்கையில் தகுதி மதிப்பெண் சதவீதத்தைக் குறைத்து மத்திய அரசு அறிவிப்பாணையை வெளியிட்டது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தசூழலில் நீட் முதுநிலை மருத்துவ சேர்க்கையை ஆய்வுசெய்து சீரமைக்க சுகாதாரப் பணிகள் தலைமை இயக்குநர் தலைமையிலான 12 உறுப்பினர்கள் கொண்ட உயர்நிலை நிபுணர் குழுவை மத்திய அரசு நியமித்து உள்ளது. இதனிடையே நீட் முதுநிலை மருத்துவ சேர்க்கை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா மற்றும் அலோக் அராதே அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், "மருத்துவக் கல்விச் சேர்க்கை முறையை ஆய்வு செய்யும் நிபுணர் குழுவின் பரிந்துரைகள் மிக முக்கியமானது என்பதால் மத்திய அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் அளிக்கப்படுகிறது. நிபுணர் குழு அறிக்கையை 3 வாரங்களுக்குள் மத்திய அரசு தாக்கல் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.





சிகரத்தின்

# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174





## நடிகர் தனுஷ் 2031 தேர்தலில் போட்டியிட திட்டம்?

**சென்னை, அக்.08:** அரசியல் களம் காண உள்ள நடிகர் தனுஷ், முதல்வர் விஜய் போலவே நேரடியாக 2031 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் நடந்த முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் மிகப்பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது. தமிழக வெற்றிக் கழகம் (தவெக) என்ற அரசியல் கட்சியை தொடங்கிய விஜய், 2 ஆண்டுகளில் ஆட்சியை பிடித்துள்ளார். இந்த அரசியல் மாற்றதால், தமிழக அரசியலில் பல ஆண்டுகளாக மாறி, மாறி கோலோச்சிய திமுக, அதிமுகவின் செல்வாக்கு குறைந்துள்ளது.

எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கி ஆட்சியை பிடித்த பிறகு, நடிகர்கள் சிவாஜி கணேசன், பாக்கியராஜ், டி. ராஜேந்தர் உள்ளிட்டோர் அரசியல் கட்சியை தொடங்கினர். ஆனால், அவர்களால் எம்ஜிஆரை போல் அரசியலில் வெற்றி பெற முடியவில்லை.

இதற்காக பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். நடிகர் தனுஷை தொடர்ந்து சூர்யா, சிவகார்த்திகேயன் ஆகியோர் தங்களுடைய ரசிகர்கள் சந்திப்பை நடத்தியுள்ளனர். மற்ற நடிகர்களை விட, தீவிர அரசியலில் ஈடுபட முடிவு செய்துள்ள தனுஷ், அதற்கான அனைத்து பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கிடையில் "தமிழக எழுச்சிக் கழகம்" என்ற பெயரிலான கட்சியை தேர்தல் ஆணையத்தில் தனுஷ் தரப்பு பதிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது. இதுபற்றி தனுஷ் தரப்பில் கேட்ட போது, "அரசியல் கட்சி தொடங்கப் போவது உறுதி. ஆனால், இன்னும் கட்சி பெயர் எல்லாம் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யவில்லை. அதிகாரப் பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும். அதுவரை ரசிகர்கள் பொருமையாக காத்திருக்க வேண்டும்" என்றனர்.

தனுஷ் கட்சி தொடங்குவது தொடர்பாக சினிமா வட்டாரத்தில் கேட்ட போது, அவர்கள் கூறியதாவது: நடிகர் ரஜினிகாந்த் கட்சி தொடங்கியிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பார். ஆனால், உடல்நிலை சரியில்லாத காரணத்தால், அவர் கட்சி தொடங்குவதில் இருந்து பின் வாங்கினார். ஆனால், விஜய் கட்சி தொடங்கி அனைத்து எதிர்ப்புகளையும், இருபெரும் கட்சிகளான திமுக அதிமுகவையும் சமாளித்து, ஏன் கரூர் சம்பவத்தில் இருந்தும்



மீண்டெழுந்து மாபெரும் வெற்றி பெற்று அரசியல் களத்தையே மாற்றியுள்ளார்.

விஜய்யின் அபார வெற்றியை பார்த்த, ரஜினி தரப்பினர் மற்றும் அவரது ரசிகர்கள் நல்வாய்ப்பை தவறவிட்டு விட்டோமே என்று ஆதங்கத்தில் உள்ளனர். அந்த ஆதங்கத்தை போக்கும் விதமாகவே, ரஜினியின் மருமகனாக இருந்த நடிகர் தனுஷ் அரசியல் களம் காண உள்ளார்.

ரஜினியின் பக்கபலத்தோடு தீவிர அரசியலில் ஈடுபடவுள்ள தனுஷ், விஜய் போலவே கட்சி தொடங்கி, வரும் உள்ளாட்சி தேர்தல், மக்களவை தேர்தலில் போட்டியிடாமல் நேரடியாக 2031ல் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளார்.

சட்டப்பேரவை தேர்தல் வெற்றிக்கு பிறகு முதல்வர் விஜய்யை, அவரது இல்லத்திலும், தலைமைச் செயலகத்திலும் கமல்ஹாசன், சிவகார்த்திகேயன், சிலம்பரசன் உள்ளிட்ட பல்வேறு சினிமா பிரபலங்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

ஆனால், இதுவரை ரஜினி, தனுஷ் ஆகியோர் விஜய்யை சந்திக்கவில்லை. ஏற்கனவே சினிமா மற்றும் அரசியலில் விஜய்யுடன் உள்ள மோதல் போக்கு, தற்போது புதிதாக அரசியல் கட்சி தொடக்கம் போன்றவைகளால் இருவரும் முதல்வர் விஜய்யை நேரில் சந்திப்பதை தவிர்த்து இருக்கலாம் என அவர்கள் தெரிவித்தனர்.

## 25 ஆண்டுகளாக பதவியில் நீடிக்க மக்களின் ஆசியே காரணம்: பிரதமர் மோடி

புதுடில்லி, அக்.08: 25 ஆண்டுகளாக பதவியில் நீடிக்க மக்களின் ஆசியே காரணம்; இன்று நான் இருக்கும் இடத்திற்கும், வகிக்கும் பதவிக்கும் மக்களின் பங்களிப்பே மிக முக்கியமானது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.



2001ல் இதே நாளில் குஜராத் முதல்வராக நான் பதவியேற்றபோது, இந்த உயரத்துக்கு வருவேன் என நினைத்துக்கூடப் பார்க்கவில்லை; 25 ஆண்டுகளாக பதவியில் நீடிக்க மக்களின் ஆசியே காரணம். இன்று நான் இருக்கும் இடத்திற்கும், வகிக்கும் பதவிக்கும் மக்களின் பங்களிப்பே மிக முக்கியமானது. இன்று வெறும் நினைவுகளுக்கான நாள் மட்டுமல்ல. நமது உறுதிப்பாட்டிற்குப் புதிய ஆற்றலை ஊட்டும் நாள் இது. இந்தியாவைப் புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்லத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஜனநாயகத்தின் மீது மிகுந்த மரியாதை கொண்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில சட்டசபை, லோக்சபா தேர்தல்கள் நடைபெற்றன; மக்கள் எனக்குச் சேவை செய்யும் வாய்ப்பை மீண்டும் மீண்டும் வழங்கினர். இன்று, இந்தியாவின் ஜனநாயகத்திற்கும் அதன் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எனது ஆழ்ந்த மரியாதையைச் செலுத்துகிறேன்.

நான் விநாயகர் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தேன். 140 கோடி இந்தியர்களுக்காகவும், எனக்காகவும் நான் பிரார்த்தனை செய்தேன். அதிக ஆற்றலுடன் நாட்டிற்காக உழைக்கவும், மக்களுக்குச் சேவை செய்யவும் தேவையான வலிமையையும் திறனையும் இறைவன் எனக்கு அருள வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாக இருந்தது.

### கோவை அரசு மருத்துவமனை மாத்திரை

## கவரில் ஹிந்தி எழுத்தால் சர்ச்சை

**கோவை, அக்.08:** கோவை அரசு மருத்துவமனையில் மாத்திரைகள் போட்டு தரும் பிரவுன் நிற கவர் முன்பகுதியில், தமிழ், ஆங்கிலத்துடன் ஹிந்தியிலும் அச்சிடப்பட்டுள்ளதாக, முன்னாள் தொழில் துறை அமைச்சர் ராஜா தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டது, சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.




கோவை அரசு மருத்துவமனையில், 2024 மே மாதம் வரை பிரத்யேக பிரவுன் நிற கவரில் மாத்திரைகள் தரும் நடைமுறை இல்லை. 'தினமலர்' நாளிதழில் இதுகுறித்து செய்தி வெளியான பிறகே, பிரத்யேக கவரில், காலை, மதியம், இரவு என அச்சிடப்பட்டு, மாத்திரைகள் வழங்கப் படுகின்றன. சில தனியார் நிறுவனங்கள் இதற்கு ஆகும் செலவை ஏற்கின்றன. சிந்தாமணி கூட்டுறவு நிறுவனம் சார்பில், இம்மருந்து சீட்டு அச்சிட்டு தரப்படுகிறது.

கோவையில் வடமாநில தொழிலாளர்கள் பலர், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருவதால், அவர்களுக்கு புரியும் வகையில், தமிழ், ஆங்கிலத்துடன், ஹிந்தியிலும் குறிப்புகள் அச்சிடப்பட்டன. கடந்த இரு ஆண்டு களாக, அதாவது தி.மு.க., ஆட்சியில் இருந்த போதும், இந்நடைமுறையே பின்பற்றப்பட்டது.

இந்நிலையில் நேற்று திடீரென, முன்னாள் தொழில்துறை அமைச்சர் ராஜா, தனது எக்ஸ் தளத்தில், ' தமிழ்நாடு மருத்துவமனைகளில், மும்மொழி கொள்கை அமலுக்கு வந்துவிட்டது போல! முதலில் கரூர். இப்போது கோவையிலும் அதே நிலைமை' என குறிப்பிட்டுள்ளார்.

## ஓமன் அருகே வர்த்தக கப்பல் மீதான தாக்குதலில் 11 இந்தியர்கள் காயம்

### இந்தியா கடும் கண்டனம்

**புதுடெல்லி, அக்.08:** ஓமன் அருகே பனாமா நாட்டுக் கொடியுடன் சென்ற வர்த்தகக் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில், இந்தியர்கள் 11 பேர் காயம் அடைந்தனர். இத்தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

'எம்டி ஆன் பீஸ்' என்ற கப்பல் கடந்த திங்களன்று ஓமன் கடற்கரைக்கு அருகே ஹார்முஸ் நீரிணை வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, ஏவுகணை அல்லது வெடிகுண்டு போன்ற எரிபொருளால் தாக்கப்பட்டது. இது குறித்து, மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் கூறியதாவது:

ஓமன் கடற்கரையில் ஹார்முஸ் நீரிணை வழியாக சென்று கொண்டிருந்த பனாமா கொடியுடன் கூடிய 'எம்டி ஆன் பீஸ்' வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலைக் கண்டிக்கிறோம்.

கப்பலில் இருந்த 19 பணியாளர்களில் 17 பேர் இந்தியர்கள். இதில், 11 இந்தியர்கள் உள்பட 12 பேர் காயமடைந்துள்ளனர். ஓமன் அதிகாரிகளின் உதவியுடன் அவர்கள் மீட்கப்பட்டு, கசாப் நகரில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இப்பகுதியில் கப்பல்கள் மீது தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்கள் இந்தியாவுக்கு மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது. பிராந்தியத்தில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் இதுபோன்ற தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இப்பகுதியில் வர்த்தகக் கப்பல்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் உள்கட்டமைப்புகளை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் முடிவுக்கு வர வேண்டும். சர்வதேச கடல்வழிகளில் கப்பல் போக்குவரத்தும், வர்த்தக நடவடிக்கைகளும் விரைவில் மீண்டும் தடையின்றி நடைபெற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## பஞ்சாப் முதல்வரின் அலுவலகம், அதிகாரி வீட்டில் திடீர் சோதனை

**சண்டிகர், அக்.08:** பஞ்சாப் மாநிலத்தில் நடந்த ஊழல் முறைகேட்டில் முதல்வர் பகவந்த் மானின் சிறப்பு அதி காரிக்கு தொடர்பு இருப்பதாக அமலாக்கத் துறை புகார் தெரிவித் திருந்த நிலையில் வழக்கு தொடரப்பட்டது.



இந்நிலையில், சிபிஐ அதிகாரிகள் நேற்று முதல்வர் பகவந்த் மானின் முகாம் அலுவலகம், சண்டிகரில் உள்ள முதல்வரின் சிறப்பு அதிகாரியின் வீடு ஆகியவற்றில் சோதனை நடத்தினர்.

இதுகுறித்து பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் தனது எக்ஸ் தளப் பதிவில் கூறும்போது, "அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பஞ்சாப் மாநில சட்டப் பேரவைத் தேர்தலுக்காக பாஜக தயாராகி வருவதை இந்த சோதனை காட்டுகிறது.

என்னுடைய முகாம் அலுவலகத்திலும், என்னுடைய சிறப்பு அதிகாரி வீட்டிலும் சிபிஐ அதிகாரிகள் சோதனை நடத்தி உள்ளனர். பஞ்சாப் அரசு மீதும், என் மீதும் வீண் பழி சுமத்தி அவப் பெயரை ஏற்படுத்தவே அமலாக்கத் துறை, சிபிஐயை என் மீது பாஜக ஏவி விடுகிறது. என் மீது மக்கள் வைத்துள்ள செல்வாக்கை அழிக்க நினைக்கிறது பாஜக" என்றார்.

### வங்கிகளின் குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம்

## 0.25 சதவீதமாக உயர்த்தியது ரிசர்வ் வங்கி

**சென்னை, அக்.08:** வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதம் ரெப்போ வட்டி விகிதம். இரு மாதங்களுக்கு ஒருமுறை ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கூடி , ரெப்போ வட்டி விகிதம் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கும். அதன்படி, ரெப்போ வட்டி விகிதம் குறித்த அறிவிப்பை ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ளது.

ரெப்போ வட்டி விகிதத்தை 0.25 சதவீதம் ரிசர்வ் வங்கி உயர்த்தி உள்ளது. இதனால் ரெப்போ வட்டி விகிதம் 5.5 சதவீதமாக உயர்த்தி ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா அறிவித்துள்ளார். இதனால் வீடு, வாகனக் கடன் வட்டி விகிதம் உயர வாய்ப்புள்ளது. கடந்த 3 ஆண்டுகளுக்கு பிறகு ரெப்போ வட்டி விகிதம் உயர்ந்துள்ளது.

நிருபர்களிடம் சஞ்சய் மல்ஹோத்ரா கூறியதாவது: இந்திய பொருளாதாரம் வலுவாக இருக்கிறது. வரும் காலங்களில், உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மை உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் சில தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். ரிசக்தி செலவுகள் மற்றும் உயர்ந்து வரும் உணவுப் பொருட்களின் விலைகளால், உலகளாவிய பணவீக்கம் கடுமையாக அதிகரிக்கும், என்றார்.

### டெல்லி ஆகாஷ்வாணி பவனுக்குள் அத்துமீறி நுழைந்ததாக

## ராகுல், பிரியங்கா உள்பட 10 எம்பிக்கள் மீது வழக்கு

**புதுடெல்லி, அக்.08:** தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி டெல்லியில் நடைபெற்ற போராட்டத்தின் போது ஆகாஷ்வாணி பவனுக்குள் அத்துமீறி நுழைந்ததாக ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் மீது டெல்லி போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி இண்டியா கூட்டணி எம்பிக்கள் பங்கேற்ற பேரணி டெல்லியில் நடைபெற்றது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், திரிணாமூல் காங்கிரஸ் பொதுச்செயலாளர் அபிஷேக் பானர்ஜி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் சுமார் 300 பேர் இதில் பங்கேற்றனர்.



நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவுக்கு அவர்கள் பேரணியாகச் சென்றனர். அகில இந்திய வானொலி நிலையம் (ஆகாஷ்வாணி) அருகில் போலீஸார் தடுப்புகளை அமைத்து எதிர்க்கட்சி எம்பிக்கள், தலைவர்கள், தொண்டர்களை தடுத்து நிறுத்தினர். ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் தடுப்புகளின் மீது ஏறி கோஷமிட்டனர். பின்னர் அகில இந்திய வானொலி நிலைய வளாகத்தில் ராகுல் காந்தி உள்ளிட்டோர் தர்ணாவில் ஈடுபட்டனர். அவர்களை டெல்லி போலீ ஸார் வேனில் ஏற்றினர். எனி னும், ராகுலும் பிரியங்காவும் வேனில் இருந்து இறங்கி மீண்டும் வானொலிநிலைய வளாகத்தில் நுழைந்தனர்.

ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, 50 எம்பிக்கள் உட்பட 250 பேர் வானொலி நிலைய வளாகத்தில் தொடர் தர்ணாவில் ஈடுபட்டனர். சுமார் 9 மணி நேரத்துக்கும் மேலாக அவர்களின் தர்ணா நீடித்தது. டெல்லி போலீஸார் அவர்களை கைது செய்து அங்கிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

இந்நிலையில், அத்துமீறி நுழைந்தது தொடர்பாக ஆகாஷ்வாணி ஊழியர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்பட 10 எம்பிக்கள் மற்றும் பலர் மீது டெல்லி போலீஸார் குற்றவியல் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இது குறித்து டெல்லி காவல்துறை அதிகாரி ஒருவர், கூறுகையில் "குறைந்தது 10 எம்பிக்கள் மற்றும் அடையாளம் காணக் கூடிய பிற நபர்களின் பெயர்கள் புகாரில் குறிப்பிடப் பட்டுள்ளன. குற்றவியல் அத்து மீறல் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது" என அவர்

## 2023க்குப் பிறகு நடந்த அனைத்து தேர்தலையும் ரத்து செய்ய பிரகாஷ் ராஜ் வலியுறுத்தல்

சென்னை, அக்.08: சென்னைப் பத்திரிகையாளர் மன்றத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எஸ்ஐஆர் பணிகள் மூலம் வாக்காளர் பட்டியலில் இருந்து 13 கோடி பேர் நீக்கப்பட்டுள்ளனர். இந்த ஜனநாயக நாட்டில் மக்களுக்கு இருக்கும் ஒரே உரிமை வாக்குரிமை மட்டும்தான்.



ஆனால் 13 கோடி பேரின் உரிமையைப் பறித்துள்ளனர். இதை வாக்காளர்கள் நீக்கம் என்ற பிரச்சினையாக மட்டும் பார்க்ககூடாது. பாஜக அரசு தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் மாற்றம் செய்ததில் இருந்து இந்த பிரச்சினை தொடங்குகிறது. மேலும் இதை சரியாகக் கண்காணிக்க வேண்டிய உச்ச நீதிமன்றமும் இதற்கு துணையாக இருந்துள்ளது.

தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை நீக்கம் செய்து, அவரிடம் விசாரணை நடத்த வேண்டும். 2023க்குப் பிறகு நடந்த அனைத்து தேர்தல்களையும் ரத்து செய்ய வேண்டும். இதற்கு மக்கள் அனைவரும் வீதியில் இறங்கி போராட வேண்டும். ஊடகங்களின் குரல் என்பது மக்களின் குரல். பிரதமர் மோடி செய்தியாளர்களை சந்திப்பதில்லை. முதல்வர் விஜய்க்கும் இதையே நான் கூற விரும்புகிறேன்.


Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S. SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.